# நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 5, 2019

## முக்கிய தினம்

### ஏப்ரல் 5 - தேசிய கடல் தினம்

- 100 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில், 1919 ஆம் ஆண்டில், தி சிண்டியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி லிமிட்டட்டின் முதல் கப்பல், எஸ் எஸ் லாய்லிட்டி, ரஷ்ய சென்றது இது இந்தியாவின் கப்பல் வரலாற்றின் ஒரு முக்கியமான நாளாகும் .
- தேசிய கடல் தினத்தின் 56 வது பதிப்பின் 2019 கருப்பொருள்: "Indian Ocean-An Ocean of opportunity"
- ஏப்ரல் 5, 1964 அன்று முதல் தேசிய கடல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. தேசிய கடல் தின விருதின் பெயர் வருணா விருது ஆகும்.

## மாநாடுகள்

### இந்தியா - நேபாளம் முதலீட்டு உச்சி மாநாட்டு - மே மாதம் நடைபெறும்

- நேபாளத்தின் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு (FNCCI) மே மாதம் காத்மாண்டுவில் நேபாள முதலீட்டு உச்சிமாநாடு நடைபெறும் என்று அறிவித்துள்ளது.

### இந்தியா - இத்தாலி இடையே வழக்கமான தூதரக உரையாடலை நடத்த முடிவு

- இந்தியாவும் இத்தாலியும் வழக்கமான தூதரக உரையாடலை நடத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன. 7 வது வெளிநாட்டு அலுவலக ஆலோசனைக் கூட்டத்தில் (FOC) இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

## தரவரிசைகள்

### ஃபிஃபா தரவரிசை

- இந்தியா - 101வது இடம், 1வது இடம் - பெல்ஜியம், 2வது இடம் - பிரான்ஸ், 3வது இடம் - பிரேசில்

## தேசிய நிகழ்வுகள்

### உலக சுகாதார நாள் ஒற்றுமைக்கான மனித சங்கிலி

- உலக சுகாதார அமைப்பு (WHO) உடன் இணைந்து சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் உலக சுகாதார நாள் (ஏப்ரல் 7) கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஒற்றுமைக்கான மனித சங்கிலி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. **2019 உலக சுகாதார நாள் கருப்பொருள்: Universal Health Coverage: Everyone, Everywhere.**

## தமிழ்நாடு

### ஆதிச்சநல்லூர் கி.மு. 905 முதல் 696 வரையிலான காலப்பகுதியை சார்ந்தது

- தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் அகழ்வாராச்சி தளத்தில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட மாதிரிகளின் கார்பன் டேட்டிங் தகவல்களின் மூலம் ஆதிச்சநல்லூர் கி.மு. 905 முதல் கி.மு. 696 வரையிலான காலப்பகுதியில் இருந்ததாக தெரியவந்துள்ளது.
- கார்பன் டேட்டிங் மாதிரிகள் அறிக்கை அமெரிக்காவின் பீட்டா அனாலிடிக் சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மின்சார மோட்டார் சைக்கிள் அறிமுகம்

- மைக்ரோமேக்ஸின் இணை நிறுவனர்களில் ஒருவரான ராகுல் ஷர்மா, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மின்சார மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளர், இது இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

## திட்டங்கள்:

### GPWL 2019 திட்டம்

- பெண்களுக்குக்கான கல்வி திட்டகுழு வேதிகா மற்றும் கவனிப்பு ஆராய்ச்சி அறக்கட்டளை (ORF) இணைந்து பெண்கள் தலைமைத்துவத்திற்கான உலகளாவிய திட்டம் (GPWL) 2019 முதல் பதிப்பினை ஆரம்பித்துள்ளனர்.

## வணிகம் & பொருளாதார நிகழ்வுகள்:

### 15வது நிதி ஆணையத்தின் உயர் மட்ட விவாதம்

- அரசாங்கத்தின் மட்டத்திலான நிதி உறவுகள் மீதான 15வது நிதி ஆணையத்தின் உயர் மட்ட விவாதம் நடைபெற்றது. இது 15வது நிதிஆணையத்தின் தலைவரான ஸ்ரீ என்.கே.சிங் அவர்களால் நடத்தப்பட்டது மற்றும் உலக வங்கி, OECD மற்றும் ADB உடன் நடத்தப்படும் கூட்டு விவாதமாகும்.

## ஒப்பந்தங்கள்

### மாஸ்கோ பங்குசந்தையுடன் பிஎஸ்இ, இந்தியா INX ஒப்பந்தம்

- BSE மற்றும் இந்திய சர்வதேச பங்குச்சந்தை (INX) மாஸ்கோ பங்குசந்தை (MOEX) உடன் முதலீட்டாளர் சமூகத்தையும் நிறுவனங்களையும் இணைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. மாஸ்கோ பங்குச்சந்தையுடன் ஒப்பந்தமிடும் முதல் இந்தியப் பங்குசந்தை BSE & INZ, ஆகும்.

## பாதுகாப்பு நிகழ்வுகள்

### கத்தார் கடற்படை மேஜர் ஜெனரல் இந்திய பயணம்

- கத்தார் எமிரி (QENF) கடற்படை மேஜர் ஜெனரல் கமாண்டர், அப்துல்லா ஹாசன் எம் அல் சுலைட்டி யின் அதிகாரபூர்வ பயணம் (ஏப்ரல் 02 முதல் 05 வரை) நிறைவுபெற்றது.

## விளையாட்டு நிகழ்வுகள்

### 2020 ஒலிம்பிக் டென்னிஸ் விளையாட்டு நடைமுறை மாற்றம்

- சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு (ITF) 2020 ஒலிம்பிக் டென்னிஸ் போட்டி வடிவங்களில் மாற்றங்களை அறிவித்துள்ளது. ஆண்கள் ஒற்றையர் தங்க பதக்கப் போட்டி ஐந்து டைப்ரேக் சுற்றுகளுக்கு பதிலாக இனி மூன்று டைப்ரேக் சுற்றுகளாக நடக்க உள்ளது.

WhatsAPP குரூப்பில்சேர- [கிளிக்செய்யவும்] Telegram Channel -ல்சேர - [கிளிக்செய்யவும்]